தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1986, மே, 13, செவ்வாய்க்கிழமை.

சித்திரை 30, அட்சய, திருவள்ளுவர் ஆண்டு 2017

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய்''

வரப் போவதை முன்னே அறிந்து காத்துக்கொள்ள வல்ல அறிவுடையவர்க்கு, அவர் நடுங்கும்படியாக வரக்கூடிய துன்பம் ஒன்றும் இல்லை.

1. வினாக்கள்—விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

உருக்கு விலை நிர்ணயம்.

754— (*வினா எண். 5805) திரு. செ. செம்மலை : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உருக்கு விலை நிர்ணயம் குறித்த முடிவை மறு பரிசீலனை செய்ய மாநில அரசு மைய அரசை வற்புறுத்தியுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. செ. செம்மலை : தலைவர் அவர்களே, தற்போது போக்குவரத்துச் செலவை அதாவது 'பிரைட் சார்ஜஸ்' உள்ளடக்கி உருக்கு விலையினை நிர்ணயித்துக் கொண்டிருந்த போதிலும், 'ஸ்டீல் அத்தாரிட்டி ஆப் இந்தியா' என்ற மத்திய அரசு நிறுவனம் எதிர்காலத்தில் போக்குவரத்துச் செலவை அந்தந்த மாநில அரசே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நிர்ப்பந்தம் செய்வதாக நான் அறிகிறேன். அப்படி போக்குவரத்துச் செலவை மாநிலங்கள் ஏற்றுக் கொண்டால் அது பெரிய சுமையாக அமையும். அதோடு கூடுதல் விலைக்கு உருக்கை விற்க வேண்டிய நிலையும் ஏற்படும். ஆகவே இந்தச் சூழ்நிலையில் நம்முடைய அரசு என்ன நிலையை வற்புறுத்தி இருக்கிறது என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

[1986 மே 13

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தற்போது இந்தியாவில் இரும்பு எங்கே வாங்கப்பட்டாலும் ஒரே விலையென்ற கொள்கை இருக்கிறது. குறிப்பாக இந்தியாவில் தென்னகத்தில்தான் அதுவும் தமிழ்நாட்டில் என்ஜினியரிங் இண்டஸ்ட்ரீஸ் என்று சொல்லக் கூடிய தொழில்கள் அதிகமாக உள்ளன. ஆகவே அவரவர்கள் ரெயில்வே சார்ஜசும் சேர்த்துக் கொடுக்க வேண்டுமென்ற நிலை வருமானால் தமிழ்நாடு மிகவும் பாதிக்கப்படும். ஆகவே தற்போதுள்ள நடைமுறை, இந்தியாவில் இரும்பு எங்கே வாங்கினாலும் ஒரே விலை "freightequalisation" என்று சொல்வார்கள், அதை அப்படியே தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்று தமிழக அரசு வற்புறுத்தி வருகிறது. அண்மையில் தென்னகத்தைச் சேர்ந்த தொழில் அமைச்சர்கள் மாநாட்டில், ஜூலை 1985-இல் நடந்த போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டு மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டது.

திரு. செ. செம்மலை : தலைவர் அவர்களே, இப்போது இந்த உருக்கு விலையை நிர்ணயிக்கிற போது "ஸ்டீல் அத்தாரிட்டி ஆப் இந்தியா" எந்தெந்த அடிப்படையில் நிர்ணயம் செய்கிறது என்ற விவரத்தையும், அப்படி விலை நிர்ணயம் செய்கிறபோது மத்திய அரசு நிறுவனமான அந்த நிறுவனம் மாநில அரசை ஏதாவது ஒரு வகையில் கலந்து கொள்கிறதா என்ற விவரத்தையும் அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, எந்தெந்த அடிப்படையில் 'செயில்' (Sail) நிறுவனம் இந்த விலையை நிர்ணயம் செய்கிறது என்ற விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை. பொதுவாக உற்பத்திச் செலவை வைத்து அவர்கள் விலையை நிர்ணயம் செய்கிறார்கள். நிலக்கரி, இரும்பு போன்ற மூலப் பொருள்கள்—தொழில்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருள்களுக்கு விலையை உயர்த்தும் போது, பெரும்பாலும் அவற்றை பயன்படுத்துவது மாநில அரசுகளாக இருப்பதன் காரணத்தால், மாநிலங்களை கலந்து கொண்டு இந்த விலையை உயர்த்துவது நன்றாக இருக்கும். மாநிலங்களுடைய சம்மதத்தைப் பெற்று என்று கூட இல்லை, மாநிலங்களை கலந்து கொண்டு இந்த விலை உயர்வு இருக்க வேண்டுமென்பதை நாம் வற்புறுத்தி வருகிறோம். இந்திய அரசு அதை இன்னும் ஏற்றுக் கொள்ளவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, தேசம் முழுவதும் உருக்கைப் பொறுத்தவரையில் ஒரே விலை நிர்ணயம் செய்வது என்பது ஒரு சரியான முடிவாகும். மேற்கு வங்கம் போன்ற மாநிலம் இதை எதிர்த்தாலும் கூட இந்தியப் பேரரசு இந்தக் கொள்கையில் உறுதியாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல, தென்னகத்தைப் பொறுத்தவரையில், தமிழகத்தைப் பொறுத்தவரையில் என்ஜி

1986 மே 13]

னியரிங் இண்டஸ்ட்ரீஸ் அதிகமாக இருப்பதால், உருக்கைப் போல நிலக்கரியும் மின்சார உற்பத்தி போன்ற பல்வேறு பணி களுக்கு தேவைப்படுகிறது. ஆகவே நிலக்கரிக்கும் உருக்கைப் போன்று ஒரே விலையை நிர்ணயம் செய்ய தமிழக அரசு இந்தியப் பேரரசை வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்தியாவினுடைய பொருளாதார வளர்ச்சியில் வட்டார ஏற்றத் தாழ்வுகளைப் போக்குவதற்கு oregional imbalance மூலப் பொருள்கள் இந்தியாவில் எல்லா இடங்களிலும் ஒரே விலையில் கிடைப்பது என்பது நல்ல கொள்கை. நிலக்கரியும் அதே போல, சுரங்கங்கள் எப்புலத்தில் இருந்தாலும், ஒரே விலையில் இந்தியா முழுவதும் கிடைக்குமென்ற நிலை இருந்தால் பல மாநிலங்கள் அனல் மின் நிலையங்களைத் தொடங்குவதற்கு முன் வரும். ஆகவே நாமும் அந்தக் கொள்கையை வற்புறுத்தி வருகிறோம்.

திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உருக்கு, நிலக்கரி போன்ற மூலப்பொருட்களின் விலை ஏற்றப்படுகிறபோது மாநிலங்களின் திட்ட மதிப்பீட்டை திருத்தி அமைக்க வேண்டிய அவசியம் நேரிடுகிறது. எனவே திட்ட மதிப்பீட்டை நிலைகுலையாமல் வைக்கக்கூடிய வகையில், இந்த விலையேற்றங்கள் ஏற்படுகிறபோது அவற்றால் பாதிக்கக் கூடிய இந்த மதிப்பீட்டை ஈடுகட்ட மத்திய அரசிடமிருந்து மாநில அரசு மானியம் கோருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மத்திய அரசு மானியம் கொடுத்தால், விலையேற்றம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. அவர்களுக்கே பணம் இல்லாத தினால் விலையேற்றம் செய்கிறார்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்களுக்கு நமது அரசு 30 லட்சம் வீடுகளைக் கட்டித் தரும் திட்டத்தை அறிவித்து இருக்கிறது. இந்தச் சமயத்தில் உருக்கு விலையை மத்திய அரசு இஷ்டம் போல் ஏற்றியிருக்கிறது. எனவே இந்த வீடு கட்டும் திட்டத் திற்கு உருக்கு விலையை குறைத்துத் தரும்படி மத்திய அரசை நமது அரசு வலியுறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அத்தகைய கருத்துரு எதுவும் இல்லை.

திரு. க. பாலசுப்பிரமணியன் : பேரவைத்தலைவர் அவர் களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னபோது, உருக்கு விலை இந்தியா பூராவிலும் ஒரே விலைக்கு இருக்கிறது என்று சொன்னார்கள். அதேநேரத்தில் தமிழகத்திற்கு அதை

எடுத்து வருவதற்கு நீண்ட தூரம் இருக்கிறது. ஆகவே அதை எடுத்து வருகின்ற அந்த டிரான்ஸ்போர்ட் சார்ஜ்ஜஸ்—அதாவது போக்குவரத்துச் செலவு அதிகமாக ஆகிறது என்று சொன்னார்கள். ஆகவே தூரம் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், இந்த டிரான்ஸ்போர்ட்சார்ஜ்ஜஸ் என்று சொல்லக்கூடிய அந்தப்போக்குவரத்துச் செலவைக் குறைக்கவேண்டும் என்று மத்திய அரசை மாநில அரசு கேட்டிருக்கிறதா? இல்லை என்றால் இனிமேல் கேட்டு அதைக் குறைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தற்போது உள்ள நிலைமை நமக்கு சாதகமாக இருக்கக்கூடிய நிலைமை. அதாவது எவ்வளவு தூரம் என்பது முக்கியம் அல்ல. இந்திய அரசு அதற்கான கொள்கையை வகுத்து, ஆராய்ந்து இந்தியாவிலே எங்கே கிடைத்தாலும், இன்றைக்கு ஒரே விலைதான். ஆனால் அதை மாற்றவேண்டும் என்கிற முயற்சி நடக்கிறது. அதை எப்படி மாற்றப் போகிறார்கள் என்றால், இரும்பை அந்தந்த மாநிலங்கள் வாங்கிக் கொண்டு, போக்குவரத்துச் செலவை அவர்களே மேற்கொள்ள வேண்டும் என்று அதாவது ereight equalisation வேண்டாம் என்கிற ஒரு முயற்சி நடைபெறுகிறது. அந்த முயற்சியை எதிர்த்துத்தான் தமிழக அரசு வாதாடி வருகிறது. ஏற்கனவே உள்ள நடைமுறை இந்தியாவிலே நாம் எங்கே இரும்பு வாங்கினாலும் ஒன்று என்ற நிலைமைதான் இருக்கிறது. போக்குவரத்துக்கு என்று தனியாக செலவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை.
வு

அய்யம்பேட்டையில் உபமின் நிலையம்.

755—(*வினா எண். 6135): **திரு. எஸ். இராசாராமன் :** மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், பாபநாசம் தாலுக்கா, அய்யம்பேட்டை நகரில் உபமின் நிலைய வேலைகள் துவங்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வேலை துவங்கப்பெறும்?

(இ) அதன் மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) இதற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. பணிகள் விரைவில் துவங்கப்படும்.

30.413 லட்சம்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS